# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.169/2024

**Deposition of** Lw3 examined as PW3 Dt. 27.03.2026

| | |
|---|---|
| Name | ராஜா |
| Father Name | லட்சுமணன் |
| Village | மயிலாடுதுறை |
| Age | 65/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.03.26
(A1 to A3 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து ஸ்டூடியோ வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 எனது நண்பர் ஆவார். அ.சா.1 ன் உறவினர்கள் அ.சா.1 ஐ அடித்துவிட்டதாக கூறி அ.சா.2 எனக்கு போன் செய்து காவல் நிலையத்திற்கு வரும்படி கூறினார். நான் காவல்நிலையத்திற்கு சென்றேன். அப்போது போலிசார் அ.சா.1 னிடம் சம்பவத்தை பற்றி கேட்டு விசாரித்தார்கள். அப்போது நான் சம்பவத்தை பற்றி கேட்டு தெரிந்து கொண்டேன். அ.சா.1 ஐ எதிரிகள் அடித்துவிட்டார்கள் என்று போலிசாரிடம் கூறினார். அது சம்பந்தமாக போலிசார் என்னையும் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.2 எனக்குபோன் செய்யும் போது நான் எங்கிருந்தேன் என்றால் பழைய கூடலூரில் உள்ள எனது ஸ்டுடியோவில் இருந்தேன். போன் செய்து எவ்வளவு நேரம் கழித்து நான் காவல்நிலையத்திற்கு சென்றேன் என்றால் 15 நிமிடம் கழித்து சென்றேன். அ.சா.1 என்னிடம் சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்று கூறினாரா என்றால் கூறியுள்ளார்.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி
யின் முன்னிலையில சாட்சிக்கு படித்துக்
காட்டப்பட்டு அவரால் சரியானதென்று
ஏற்கப்பட்டது

27/3/26.

நீதித்துறை நடுவர் எண் I
மயிலாடுதுறை

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.169/2024

Deposition of PW2 Cross Dt. 27.03.2026

| | |
|---|---|
| Name | செந்தில்குமார் |
| Father Name | மாரிமுத்து |
| Village | திருவிழந்தூர் |
| Age | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 27.03.26

(A1 to A3 Present)

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது நண்பர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் வேலி வைத்து அ.சா.1 அடைத்துக்கொண்டிருந்தபோது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். போலிசார் விசாரணையில் சம்பவ இடத்தில் 10 பேர் இருந்தார்கள் என்று சொன்னேனா என்றால் கூட்டமாக இருந்ததாக கூறினேன். அ.சா.1 புகார் கொடுக்க சென்றபோது நான் சென்றேனா என்றால் சென்றேன். அ.சா.1 புகாரில் 10 நபர்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்தார்கள் என்று எழுதினாரா என்றால் நான் புகாரை படித்துப்பார்க்கவில்லை. அ.சா.1க்கும் எதிரிகளுக்கும் சொத்து பாகப்பிரிவினை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் பிரச்சனை நடந்த போது அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் பிரச்சனையை விலக்கி விட்டார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. நான் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எனது நண்பருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் உண்மையில் நடந்திருந்தால் சம்பவ இடத்தில் இருந்த நபர்களை சாட்சியாக இந்த வழக்கில் போலிசார் சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

[signature]

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி/அவர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

[signature] 27/3/26.

நீதித்துறை நடுவர் எண் 1

மயிலாடுதுறை